நானவணமேனுசையினுணுயுருவியென்றருப்பை
மேனிபிடுங்கிபல்வளக்கினேன்மோனமந்த ௫௯௩
தர்ப்பணத்தைநீக்கித்தலைமுழுகினேன்கலவி
யுற்பனத்தையெண்ணியுருச்செபித்தேன்பொற்புடைய ௫௯௪
மாயஸ்திரீயைவிட்டுவந்துநெடுநோமென்று
காயத்திரியைவிட்டேன்காமிபோல்தூயமணி ௫௯௫
தூவுகிரைவையையிலோர்சோமன்மறந்தேன்முன்
காவிரியிற்போட்டகலக்கம்போல்-தீவரமாய்ப் ௫௯௬
போனேனவணமனையிற்பொற்கொடியாள்சொற்படியோர்
மாணுப்பிள்ளையழைத்துவாருமென்று-மீனாட்சி ௫௯௭
யாயிவீட்டிற்சமையலாச்சதுபோமென்றாள்நான்
போயிருந்துசாப்பிட்டேன்போசனத்தாற-காய்கறிகள் ௫௯௮
இன்னதெனவறியேனின்னாசமென்றறியேன்
கன்னிமேல்வைத்தகவனத்தாலென்னுடைய ௫௯௯
கையிரமாறுமுன்னேகாகலியைவந்தணைந்தா
சையோகவைபோகசமபோக-மெய்போகம் ௬௱
ஆகச்சுகித்தேனகப்பட்டேன்பாய்மாத்திற்
காகத்தையொத்தேனென்காதல்-மோகவலைப் ௬௱௧

சரக்கிழவிமருந்துகூட்டத்தொடங்கினமைகூறல்

பூட்டிக்குளாவோலைப்பெட்டிவாய்சிலைகமருந்துக்
கூட்டிக்குவேயடக்கக்கோப்பிட்டிரன்காட்டு ௬௱௨

வனமூலிகைசேர்த்தமைகூறல்

மருந்துவகைசேர்வடக்கிலாத்தமடக்கி
கருத்துவகைபாடவரைசஞ்சாபெருந்தும் ௬௱௩
ஆதளைமேற்புல்லுருவியாவரைமேற்புல்லுருவி
மாதளைமேற்புல்லுருவுமல்லாமை-தூதுவளை ௬௱௪
பேய்ப்பீர்க்கபேய்முசுட்டைபேய்ச்சிமிட்டிபேய்ப்புடலை
நாய்ப்பாகனாயுருவிநாய்வேளைநாய்க்கோட்டான் ௬௱௫
புன்னைப்பூவன்னிப்பூபூளைப்பூகாழைப்பூ
முன்னைப்பூமாம்பூமுருக்கம்பூசின்னிப்பூ ௬௱௬
பூலாவேர்சங்கம்வேர்புங்கம்வேர்கைவளைவேர்
வேலாவேர்கொடிவேர்வெட்டிவேர்பாலைவேர் ௬௱௭
அத்திக்காய்துத்திக்காயல்லிக்காய்நெல்லிக்காய்
கத்திரிக்காய்பேய்ச்சுரைக்காய்காஞ்சிரங்காய்-மத்தக்காய் ௬௱௮
...ன்றுசிறுகுறிஞ்சிலாபுரண்டியல்லிகீழ்க்
கல்லுமணமுறிஞ்சிகாஞ்சொறிகுன்றியிலை ௬௱௯
பின்றொட்டிமுன்றொட்டிபெண்தொட்டியாண்தொட்டி
தொன்றொட்டியையாய்ப்புலிதொட்டிஇங்கிறல் ௬௱௰
ஆனைவணங்கியமுக்கண்ணிவெந்தாமுக்கண்ணி
பூனைவணங்கிபிளிமடலை-ஊறு ௬௱௰௧
தலைசுருளிநல்லூரிதாணறிவெள்ளைத்தோன்றி
மலைகலக்கித்தரைகொடிக்குவாளை-மிலைசருநா ௬௱௰௨
ரத்தங்காய்ப்பிஞ்சுதமரத்தம்பூப்பிஞ்சுமலை
நத்தைசூரிக்கொழுந்துநாட்டகத்திசிற்றகத்தி ௬௱௰௩
தோதகத்திபட்டநரைத்தோதகத்திபஞ்சமா
பாதகத்திற்சூரியனைப்பாமடனையும்-மோதி ௬௱௰௪

கடைசரக்குசேர்த்தமைகூறல்.

மருந்துவகையாய்த்தேடிக்கட்டிகடையில்
மருந்துவகைகள்நாரிமஞ்சள்-அரைசித்திர ௬௱௰௫
மூலஞ்செவிட்டைமூலங்கடையினிற்றக்
கோலக்காம்பூலக்குரோசாணி-வலம்பு ௬௱௰௬
காரஞ்சீனக்காரங்கர்ப்பூரசாரபரி
தாரநவசாரஞ்சவுக்காரங்காரீயம் ௬௱௰௭
துத்தந்துரிசுதுருசாவசப்படுத்தும்
பொத்தமல்லிவாய்விளங்கங்குங்குமப்பூமுத்தக்கா ௬௱௰௮
செட்டிப்பணவிடையிந்துப்புவெடியாணவுப்புக்
கட்டுப்புவிட்டிறக்கறியுப்புமட்டிப்பால் ௬௱௰௯
இஞ்சில்வக்கமிதன்பத்திரிசிங்கணத்தோர்
கஞ்சியிலைபோங்கசகசாமஞ்சள் ௬௱௨௰
அதிமதுரமாசைபதிமதுரமாக்கும்
சதகுப்பைசாதிக்காய்சாபத்திரிஅதிவிடயம் ௬௱௨௰௧

பாக்குச்சிறுதேக்கும்பாஷாணம்வேப்பம்புண்
ணுக்குசிறுவிஷமுள்ளவியம்புண்ணுக்குபச்சை ௬௨௨
நாவியபிணிமுதனுலுமுழுநாலுமுலைப்
பாவிசவதரித்துப்பாரிலுள்ள-சீவன் ௬௨௩

பிராணிகளினுருப்புகள்சேர்ந்தமைகூறல்.

மருந்துவகைசெவ்வாழைவரங்லாகைதபிச்சு
பருந்துகழுதலைப்பல்லுகுரங்கிங் ௬௨௪
திரியமாவட்டைசெவ்வட்டைபெட்டை
நரிமுதுகுக்கோழிம்புகாக்கு-குருகு ௬௨௫
முனைவாய்க்குருச்சவன்முள்ளுவெள்ளைப்பல்லி
சிணவிலியான்காடைச்சிறகுடனையடியிற் ௬௨௬
குன்றுங்கல்வாலகமேற்கூரைகீழ்வாயலகு
செந்நாய்ப்பவளிவாய்த்தவாங்குகன்னம் ௬௨௭
வல்யான்கழுத்துமணிக்காடைமுட்டை
எலி-முனைபனைதியினைறச்சிபுலிமீசை ௬௨௮
வல்லூற்றுவல்லெலும்புமாடப்புறுவிவெச்சம்
கல்லூர்க்கொப்புகவரிமயிர்நல்லபாம ௬௨௯
பிறாலையிற்றெருமையினக்கோடிசெம்
பூசமூயற்புழுக்கைபுற்றின்மேல்தேரைக்கால் ௬௩௰
தூக்கணான்குஞ்சு சுழல்வண்டுநண்டுகருங்
காக்கைசிணங்காராக்கருமூலைப்பால்நாக்குப் ௬௩௧
புழுப்பூனைமீசபொலிப்புக்கடாவின்
கொழுப்புப்பெருச்சாளிகுட்டிபழுக்குமர ௬௩௨
வவ்வாற்றலைகுகிரைவாயிலுமைரகாடிச்
சவ்வுகிழவாமைமதஞ்சங்கிலாநவ்விரதம் ௬௩௩
கன்னிகழியாதபிள்ளைகாகிற்சிறுகுறும்பி
தன்னையறியாளதலையிற்பேன்சின்னவட்டை ௬௩௪
வாற்குருவிசங்கெலும்புவானம்பாடிக்குடலுன்
னூர்க்குருவிகொக்கைதன்னூருக்குமேற்குக் ௬௩௫
காட்டோரித்தொண்டைகாட்டோநிமண்டை
வாட்டோரிதேடிவகையாய்நிறுத்து ௬௩௬

மருந்துகூட்டுவகைகூறல்.

வகைமருந்தெல்லாம்தயிலமவாங்கிக்கடையிற்
கனமருந்தெல்லாம்போய்க்கரும்புதனில்வடித்த ௬௩௭
சாற்றிலரைத்துத்தசைபூனைத்தாழியிலே
யூற்றியசாராயத்திலூறவைத்துச்சோற்றடுப்பிற் ௬௩௮
செம்மிப்புத்தக்குமருதிகளிலெல்லாமருந்தும்
அம்மியிலேயிட்டுமகவல்குலிகீர்-செம்மைதரும் ௬௩௯
நாக்கிலழுக்குநகத்தழுக்குக்காலடிமண்
மூக்கில்வெயர்வும்விட்டுமூன்றுநாள்-தாய்க்கிழவி ௬௪௰

ஔஷதப்பிரயோகம்செய்தமைகூறல்.

மைபோலணைத்தூடி மங்கைகல்லாயிருந்தவுண்மை
தப்பாதெனக்கொடுத்தாள்சர்ப்பணையாள்-அப்பளத்தில் ௨௪௧

மதிமயக்கமிருந்தமைகூறல்.

இட்டாள்பழத்திலே யிட்டாள்சுண்ணாம்பிலே
இட்டாள்மதிமயக்கமெய்தினேன்-விட்டருக்கக் ௨௪௨
கூடாதுகண்ணுறக்கக்கொள்ளாதுசாப்பாட்டைத்
தேடாதுவேறுமனஞ்செல்வாதுபேடனையாள் ௨௪௩
மோகசமுத்திரத்தில்மூழ்குதலல்லாதுவிர
வாகநினையமறந்துவிட்டேன்-மோகனஞ்செய் ௨௪௪
சித்தசன்மந்திரகலைதேர்ந்தறிவதல்லாது
நித்யசெபமந்திரத்தைநீக்கினேன்-தத்துவரிக் ௨௪௫
கண்ணிசெயுவேடிக்குக்கால்பிடிப்பதல்லாது
புண்ணியநமஸ்காரங்கள்போட்டுவிட்டேன்-பெண்ணணங்கின் ௨௪௬
செங்களபக்கொங்கைதெரிசனமல்லாதுசிவ
லிங்கதெரிசனத்தைநீக்கினேன் அங்கசவேள் ௨௪௭
மாபூசைவேணியவள்வாயமிர்தமுண்டதல்லால்
தேபூசைமேற்கவனந்தீர்த்துவிட்டேன்சோபமுற்ற ௨௪௮

வஞ்சிக்கஉபாயம்செய்தமைகூறல்.

நாட்டமறிந்தென்னைநரைக்கிழவிமெல்லவொரு
கூட்டகந்தான்பேசினள்பொன்பறிக்கத்தாஷ்டிகரே ௨௪௯
ஆடித்திருநாளழகருக்கின்றுகுதந்த
வேடிக்கைபார்க்கவெகுசனங்கள்கூடியே ௨௫௰
செல்லுகிறார்நீங்களும்போய்தீர்த்தத்திலாடிவந்தால்
நல்லபலனுங்களுக்குநண்ணுதே-கல்விமீர் ௨௫௧
என்றாளவ்வார்த்தைக்கிருந்தாலறிவிலியாம்
சென்றாலுமங்கைமேற்றேட்டாமலென்றுசெழுந் ௨௫௨
தேனேமதனாபிஷேகமேநீவருவை
யானாற்றிருநாட்டழகென்றேன்-நானுமும்மைக் ௨௫௩

திருவிழாவுக்குசென்றமைகூறல்.

காணவிருந்தாலென்கண்ணுறங்குமோவென்று
பூணார்முலையாள்புறப்பட்டாள்பாணிப்பாய் ௨௫௪
பித்தனாயினுடைமைபெண்ணுக்குப்மீட்டிவர
டத்தைதொடர்ந்தாளடிப்பிறகே-பத்துபேர் ௨௫௫
பாங்கியருமின்றிவரும்பாவையுடன்சென்றழகர்
ஓங்குமலைத்தீர்த்தமுளந்தாடிபூங்குழலாய் ௨௫௬

மானுங்கலையுநரைமந்தியும்போலேயிறக்கக்
கேளுந்தழுந்துளபச்செங்கண்மால்-தானேனும் ௧௫௭
தேருக்குப்பின்னாகச்சென்றேமார்ப்பாணவிசைத்
தூரத்தேஞானியையன்றோன்றினான்றேருக்குப் ௧௫௮
பக்கத்திலேயொதுங்கிப்பாய்ந்தேனைப்புறத்தோர்
தக்கமறையோன்மனையிற்றங்கினேன்-சக்கற்றில் ௧௫௯
தூக்கிட்டதோகைச்சுரையுமடிதனிலே
பாக்கிட்டகைவாளப்பையுமாத்தாய்க்கிழவி ௧௬௰
மாதைத்தொடர்ந்துவரமங்கைகேனப்பின்றொடரப்
பாதைவழிகொண்டேன்பரிசுடனே-மாதை ௧௬௧

திரும்பிவருகையில்மோசஞ்செய்தமைகூறல்.

ஆரைநாழிக்கப்பாலாத்தைதகுறுகி
வரைமாலைமூலையாய்மறந்தேன்சரிகைவிட்ட ௧௬௨
சேலையெல்லாமோடித்திரும்புகிறேனில்லுமென்று
வாழ்ப்பெண்மேலென்மனங்கிடக்கக்காலத் ௧௬௩
தூமையுளவேட்டமெல்லாங்காட்டினேனென்பின்
குடுமியிறுலகட்டக்குதிக்கால்-விடுதியிற்போய் ௧௬௪
மீளுமுன்னமங்கையிட்டவேற்றுடைமையைக்கழட்டி
பீனைத்தன்னுங்கண்ணிபிழைதேடி ஆளுடனே ௧௬௫
போனாள்மதுரைக்கும்போய்த்துகிலைதானெடுத்து
மானுனைத்தேடிவரும்வேளைதனையன் ௧௬௬
ஊரின்முருங்கையுருவியகோல்போலனின்றாள்
மாரியெனக்கண்ணீர்வழித்தோடக்காரிகையே ௧௬௭
என்னென்றேன்விம்மியேக்கம்போனுக்குளறி
முன்னின்றுமெள்ளமொழியலுற்றாள்-அன்னை ௧௬௮
வருவார்நாமையர்வழிவிற்பறியார்
திருநாட்சனத்துடனேசெல்வோம்-அரிமையே ௧௬௯
வாவென்றாள்விட்டுவரமாட்டேனுநீபயந்தாற்
மோவென்றேன்கோபமாய்போயினாள்கூவென்றும் ௧௭௰
கேள்வியுண்டோவந்தான்கிழவனொருவனையா
போழ்வாய்நரைத்தலையின்பூண்கட்டுநீளத் ௧௭௧
தடிக்கொம்புசாரன்றனிவழியிலென்னை
அடித்துப்பறித்தானகன்றான்-திடுக்கிட்டேன் ௧௭௨
என்றானைத்தேற்றியதற்கெண்ணமேனுன்னஞ்சிஷ்டம்
ஒன்றுமேலகஷமுண்டாம்-பின்னு ௧௭௩
வருந்தாதேயென்றுமதுரைக்குவந்து

திருக்கிழையாள்வீட்டில்சென்றேன்மருந்துருட்டி ௬௭௪
அங்கேவைத்தாள்மகளேயாவலாய்ப்பார்த்துடைமை
எங்கேயென்றாள்பரிபோச்சென்றுரைத்தாள்-செங்கைக ௬௭௫

தாய்க்கிழவிபோய்ப் புலம்பல்கூறல்

தெறித்தாளபசறிநெரித்தகைகைவிட்டுப்
பிரித்தாள்வயிற்றைப்பிசைந்தாள் ஒருத்தருமில் ௬௭௬
லாதவிடத்துடைமைக்காசைய புனனுயிரைச்
சேதப்படுத்திலெனசெயவேனென் பேதை ௬௭௭
மகளேயெனக்கறிவாய்விட்டழுது
வெகுவாய்பரதவித்துவிம்மி-நகைகளெல்லாம் ௬௭௮
போச்சுதேகோவிலுக்குப்போயிவரத்தடையோன்
ஆச்சுதேயூருமறிந்ததே-யேச்சொன்று ௬௭௯
வந்ததேபணிமறித்துமிடக்காசுபணம்
சிந்துதேகண்டேனுன்றேடைநான்-வந்தடித்துக் ௬௮௰
கள்ளர்பறித்தநகைக்குவருமோவுடைமை
உள்ளதெல்லாம்ரத்நவுடைமையே-அள்ளிஅள்ளி ௬௮௧
எண்ணியிட்டசெம்பொனிருநூறுநாக்கொடுத்துப்
பண்ணியிட்டகொப்பும்பரிபோச்சேபுண்ணியவான் ௬௮௨
திக்கடையவெற்றிகொண்டசிங்கமகேந்த்ரனிட்ட
கைக்கடகமபோலுமினிக்காண்பேனோ ௬௮௩
தண்டசரப்பாணிதுரைசாமராயன்கொடுத்த
கண்டரசமேனிவட்டுக்காட்டுவனோ-அண்டலரை ௬௮௪
வெட்டிவாள்வீரன்விருபாக்ஷியான்கொடுத்த
ஒட்டியாணம்போலவுண்டாமோ சிட்டர்புகழ் ௬௮௫
ஆணிக்கனகிரியப்புராயன்கொடுத்த
மாணிக்கமாலையைப்போல்வாய்க்குமோ-வாணர்புகழ் ௬௮௬
அம்மைராயன்கொடுத்தவாணிமுத்துத்தாழ்வடத்தைக்
கொம்மைமுலையாட்கேன்கொடுத்தேனுன்நம்முடைய ௬௮௭
வல்லகொண்டையனருள்வச்ரக்கணையாழிக்
கல்லுக்கொருவர்விலைகாண்பாரோ-வலலிசெய்த் ௬௮௮
கின்னரிப்பாட்டுக்குக்கெடிக்காணமயனகொடுத்த
பொன்னரைஞாணபோற்கிடைக்கப்போகுமதா-மன்னர்புகழ் ௬௮௯
கச்சுமுலையாளுக்குக்காளிங்கன்முன்கொடுத்த
பொற்சிமிக்கைபோரகிடைக்கப்போதோகுச்சிலியர் ௬௯௰
செங்காசிராவளித்தசெம்பிழைத்தமோதிரம்போல்
இங்கார்கொடுப்பார்சொல்லேந்திழையே-மங்கைபுரி ௬௯௧
நாட்டியத்தைக்கண்டுமெச்சிக்கத்துலங்கேந்த்ரன்
போட்டகொலுசென்னூறுபொன்பொறுமேவாட்டமில்ல ௬௯௨
கோகனகவதனன்கோபாலராயனருள்
மோகனப்பொன்மாலைமுற்றுமேபோகத ௬௯௩
திருமலைக்கண்டமன்னன்றந்தருள்சித்ரக்கை

இருமுலையாட்கேன்கழுத்திலிட்டேன்கருணாநிதி ௬௯௪
பூசாரிராயனிட்டபொற்கவளிபோலைமோர
ஆசாரிபண்ணவறியானோதேகமெச்சும் ௬௯௫
போடிமகிபன்கொடுத்தபொற்கட்டிகட்டி
போடியென்றேனென்னயதிபோனேனையானதாடகையை ௬௯௬
அம்பிற்பொருராமபத்ராதுரையன்றுதந்த
தும்பிப்பதக்கவிலைசொற்பமோ-சொம்புபெரும் ௬௯௭
நாடகத்தைக்கண்டுமெச்சுநம்முத்தையன்கொடுத்த
பாடகத்தைக்கண்டாற்பசிபோமே நாடுபுழ் ௬௯௮
கொட்டராயன்கொடுத்தகோடுவச்ரவோலையும்பொற்
பட்டயறைஞானுமவிலைபண்ணுவதோவெட்டுகின்ற ௬௯௯
வாளுநலவுஞ்செங்கண்மடந்தைபெட்டுக்காறையெந்த
ஈளுவன்வீட்டிலிருக்குதே--தாளவட்டப் ௭௱
பூணூர்முலையாட்குப்போட்டவெள்ளித்தண்டையெந்தச்
சாணான்வளவிற்போய்ச்சார்ந்ததோவீணையென் ௭௱௧
மானைக்கொள்ளைகொண்டோன்வச்ரமுருகையெந்தக்
கோனான்றனைகையிற்கொடுத்தானோ, ஆனாலும் ௭௱௨
மூவைங்காயபாட்டிகண்டமூக்குத்தளுக்கையென்ன
பூவென்றெங்கேயெறிந்துபோட்டாளோபாவைநல்லாய் ௭௱௩
என்னமோகாமினிமேவென்றாள்கிழவியையும்
கன்னியையுந்தேற்றுக்கணக்கேற்றிக் அந்நேரம் ௭௱௪

அணிசெய்திட்டமைகூறல்

ஐயாயிரம்பொன்னவல்பொல்ப்பார்வையிட்டு
கையாரத்தட்டான்கையிட்டுச்செய்த ௭௱௫
உடைமையெல்லாமந்தவுருப்படியேவிட்டு
வடிவையெல்லாம்பார்த்துமகிழ்ந்தேன்-கொடியிடையை ௭௱௬
மஞ்சத்திற்கூடிமகிழ்ந்திருக்கும்போதொருநாள்
பஞ்சொத்தகூந்தலாள்பையவந்துவஞ்சிசே ௭௱௭
கோயிலுக்குப்போவென்றாள்கோடியில்லைசேலையெல்லாம்
சாயமில்லையென்றுசலிப்பாளுள்பேயே ௭௱௮
பிறந்தவூருக்குப்புடைவையேனம்மை
அறிந்தவரேயல்லான்மற்றூர்காணநறுங்குழாய் ௭௱௯
பொன்னின்குடத்துக்குப்பொட்டிடலேன்போவென்கள்
அந்நேரமாதையழைத்துப்போய்நன்னிசெட்டி ௭௱௰

ஆடைவாங்கிகொடுத்தமைகூறல்

கட்டுகர்க்கச்சேலைக்கடையிலிடைக்கிசைந்த
பட்டுவர்க்கம்பார்த்துபளபளப்பாம்மட்டுவர்க்கப் ௭௱௰௧
பாவாடைவிட்டமொழிப்பாவைக்குப்பொன்ரவிக்கை
பாவாடைவர்க்கமபதினாறுமேவியிரு ௭௱௰௨

செப்புவர்ணமாய்த்திரிந்தகொப்புவர்ணம்-இப்புவியில் ௭௧௩.
ஆதிவர்ணம்போலுமழகுடையாளுக்கிசைந்த
வீதிவர்ணச்சேலையொன்றுவிக்கையாம்-வாதுமத ௭௧௪
பாணத்தாற்கூந்தற்பவளவாய்ப்பைந்தொடிக்கு
வாணத்தாற்சேலைவகைமூன்று-வேணுமணி ௭௧௫
முத்துவர்ணமூரணல்லாள் மூலைக்குள்வைத்துடுக்க
முத்துவர்ணச்சேலையிலே மூன்றுவகை-வணக்திருச் ௭௧௬
சூரணவர்ணத்திலேசுட்டிநுதலாட்கிசைந்த
காரணவர்ணச்சேலைநாலைந்து-போரிற் ௭௧௭
படைமுறிச்சுக்கியகப்பாவையாள்கட்ட
உடைமுறிச்சுக்குத்தியிலேயொன்றுதொடையல் ௭௧௮
சொருகுமணிக்குழலாள்-சோடிணையாக்காட்ட
அருகுமணிச்சேலையிலேயஞ்சுபிரிவுகொண்டு ௭௧௯
சொல்லாச்சேலைப்பெருங்கட்சேயிழையாள்கட்டநல்ல
சல்லாச்சேலைத்தரமாயத்தாணிரண்டு-மெல்ல ௭௨௰
வாளெழுத்தோளாடவரைமலழுத்துவாளுடுக்க
ஆளெழுத்துச்சேலையிலேயாறேழுநீளெழிற்சேர் ௭௨௧
சந்தாக்தோண்மங்கைக்குத்தொட்டிமூத்துக்கட்டநல்ல
சந்திரகாந்தக்கச்சுதானைந்து அந்தரத்தில் ௭௨௨
இந்திரகாவிற்குலவுரம்பையனையாட்கிசையசு
சந்திரகாவிச்சேலைதானிரண்டு-சிந்துமழை ௭௨௩
மாரிக்கொடிமினமருங்கிற்கிணங்கியகஸ்
தூரிக்கொடிச்சேலைசோடிரண்டு-காரிகைக்கு ௭௨௪
காங்குசரிகைச்சேலைகம்பரவரித்துகில்பட்
டாங்குகம்பிச்சேலையரைவர்ணம்-தாங்குசிலம் ௭௨௫
பெச்சரிகையென்மிடைக்குச்சரியிதென்றற்
குச்சரிகைவர்க்கமெல்லாங்கொண்டுந்தேன்-உச்சிதமாய்த் ௭௨௬
தாய்க்கிழவிக்கட்டாள்தனக்கிரண்டுசேலையந்தப்
பேய்க்குகவாவிட்டால்பிழைப்பேது-பாக்களந்த ௭௨௭

பலவகைக்கடன்றீர்த்தமை கூறல்.

வன்னியென்றும்பாலளந்தமாரியென்றுநெய்யளந்த
சின்னியென்றுநெல்லளந்தசெல்லியென்றும்-எந்நேரம் ௭௨௮
வைவதுவும்போவதுவும்வாசலிலேநின்றலம்பல்
செய்வதுவும்போலிட்டாளித்திரிப்புக்-கைமேலா ௭௨௯
அந்தக்கடன்காரர்க்கன்றேநானேம்பதுபொன்
இந்தக்கடன்காரிக்கீந்துவிட்டேன்-அந்திசந்தி ௭௩௰
தாய்க்குடிக்கப்பெண்குடிக்கச்சாராயமூற்றிவெறிப்
பேய்பிடிக்கவிட்டகெட்டப்பிச்சிவந்து-நியாயமோ ௭௩௧
தப்பறைக்காரியென்றுசண்டைக்குவாய்திறந்தாள்
துப்பதுபொன்போட்டுவாய்மூடிவிட்டேன்செப்புமுலை ௭௩௨

தெய்வபூசைக்குகொடுத்தமைகூறல்.

மங்கைவயிற்றைவலிக்குதென்றுமார்க்கமிட்டாள்
அங்கைதொட்டக்காலதிகமாகுதென்றாள் எங்கள் ௭௩௩

சீர

குலதெய்வம்பண்ணுகிந்தக்கோட்டாலையென்றாள்
கலைகுலைந்துசோர்வதையுங் காணாள்சிறுநுதலாய் ௭௩௪
தெய்வக்குறைக்கென்னசெய்யவேணுஞ்சொல்லென்றேன்
கையிலறிவாளுங்கட்டளையாச்செய்த ௭௩௫
உருவேணும்பொற்சுருமாலைவேணும்
இருகாலுக்குச்சிலம்புமீனைப்-பரவைகளும் ௭௩௬
செஞ்சேவலும்வேணுஞ்சேவிக்கும்பாவைக்கோர்
அஞ்சாறுபொன்வேணுமாடிவரக்குஞ்சுமிட்டுப் ௭௩௭
பூங்கப்பறையெடுத்துப் பூசையிடவேணுமென்றாள்
ஆங்கப்படிக்கீந்தேனைம்பதுபொன்-தாங்கருங்கண் ௭௩௮

தங்கையிருப்பைவைத்திருக்கக்கொடுத்தமைகூறல்.

வாளைதங்குங்காதுமாதுநல்லாய்நான்கேட்ட
வேளைதாவென்றவடன்வீட்டிலேஆழாக்கு ௭௩௯
முத்துவைத்துவைத்தேன்முடிப்பாவோராயிரம்பொன்
வைத்துவைத்தேன்பின்னுமொருமாணிக்கம்சித்திரக்காற் ௭௪௰

பின்னும்பலவிதத்தால் வஞ்சித்துப்

பொருள்கவர்ந்தமைகூறல்.

கட்டிலென்றுங்கட்டிலின்மேற்கட்டிசகலாத்தென்றும்
வட்டிலென்றுஞ்சீப்புவகையென்றும்-கட்டுமட்டாங் ௭௪௧
குத்துவிளக்கென்றுங்குடப்பாலெருமையென்றும்
பத்துயேரென்றும்பசுக்களென்றும்-மெத்தையென்று ௭௪௨
மச்சுவீடென்றுமனைக்குதிர்களென்றுமங்கை
மெச்சுவிளையாடிநிற்கமேடையென்றும்-கச்சிறுக்கும் ௭௪௩
கொங்கைச்சிமிழ்மாதுகூடப்பிறந்தசின்ன
தங்கச்சிகால்களுக்குத்தண்டையென்றும்-இங்கிதமாய் ௭௪௪
ஆடவிட்டநட்டுவனார்க்கங்கியென்றுஞ்சங்கீதம்
பாடவிட்டப்பாடகர்க்குப்பாகையென்றும்-சேடியர்க்குங் ௭௪௫
கம்பிகுறிச்சேலையென்றுக்காதோலையென்றும்வெள்ளித்
தம்பிக்கையென்றுந்தலையென்றும்-செம்பொன்றும் ௭௪௬
தந்தசிமிழ்சவாதென்றுமாண்டியப்பன்
கந்தபொடியென்றுங்கதம்பமென்றும்சந்தனங்கள் ௭௪௭
என்றுமாடிக்கழுவிற்கேற்றதென்றுந்தைப்பொங்கக்
கென்றுஞ்சிவராத்திரிக்கென்றும்-நின்று ௭௪௮
தலைதடவிமூளைதனையுறுஞ்சுவார்போற்
பலவிதமாயேசசிப்பசப்பிக்-கலவையணிந் ௭௪௯
தோங்குமிளமுலையாளுணிருக்கவேயுயிரை
வாங்குவதுவோர்பொருளைவாங்கிவிட்டாள்-சோங்கிலிட்டுக் ௭௫௰
கட்டியசெம்பொன்னைக்கடலிற்கவிழ்ந்ததுபோல்
ஒட்டொழியத்தோற்றுவிட்டேனுள்ளதெல்லாம்-இட்ட ௭௫௧
மருந்தாலிருளுமருளுங்கொண்டாற்போல்
இருந்தேன்கொடுக்கவகையின்றி-உரிந்து ௭௫௨

விற்றுவெறுங்கையனமைகூறல்

கலைவிற்றேன்காதிற்கடுக்கனையும்விற்றேன்
மெல்வற்றேன்தாய்க்கிழவிவீட்டுச்-செலவுக்குக் ௭௫௩
தந்தாமைக்கேட்டாள்தலைகவிழ்ந்துநான்திருப்பி
குந்துவதைக்கண்டாள்குறிப்பறிந்தாளெத்தியென்னைத் ௭௫௪
சாரைவிட்டவெவ்விழியாள்தாய்க்கிழவிவார்த்தையைக்கேட்
டூரைவிட்டுப்போகவுபாயமிட்டாள்-சேரவென்றும் ௭௫௫

தூரத்துவதைக்கேட்டினமைகூறல்.

பின்புறங்காட்டிச்சயனமேற்படுத்தாலென்புறத்தில்
பின்புறங்காட்டிபடுப்பாள்பேசாமல்-அன்புடனும் ௭௫௬
செய்யாவுபசாரஞ்செய்யப்போனலுமுழங்
கையாலிடிப்பாள்கடுகடுப்பாய்ப்-பையவே ௭௫௭
அன்னைவந்துதன்னையழைக்கச்செறுமுபந்த
தன்னையறிந்தென்னைவிட்டுத் தானேகிப்பொன்முடிப்பு ௭௫௮
வாங்குவதுங்கூடுவதுமவள்தன்னருகிற்படுத்துத்
தூங்குவதுமாகத்தொழிலெடுத்தாள்-பாங்கியரிற் ௭௫௯

மதனாபிஷேகம்தன்னைஏசினமைகூறல்.

கோப்புடையமாயக்குறுவிடைவிட்டுப்பழைய
மாப்பிள்ளைமார்தம்மைவரச்சொல்லிப்-பேய்ப்படுவாய் ௭௬௰
அன்னியராய்வந்தாலருகிற்போய்நாணிருந்தாற்
சன்னைதெரியாதேசவுக்கலே-என்னடா ௭௬௧
போடாவெளியிற்புதுமண்டபத்திருந்து
வாடாவெனச்சொல்லுவாள்மட்டுமிஞ்சி-ஓதயங்கள் ௭௬௨
சொல்லத்தொடுத்தாள்தூரத்திடனும்பூட்டியசெக்
கெல்லைவிட்டுப்போகாவெகுதானேன்மெல்ல ௭௬௩

தாய் மகளைஏசினமைகூறல்

மகளையழைத்துமருந்தூட்டிசொல்வாள்
தகல்பாசிபாப்பான்சதமோ-முகமாயம் ௭௬௪
என்னசெய்தாயீயவனுக்கேற்றவுடம்படிக்கை
என்னசொன்னாய்பார்த்தவருக்கேற்குமோ-மின்னே ௭௬௫
கொடுக்கமட்டும்வாங்கிக்கொடாதிருந்தால்விட்டு
முடுக்கவல்லோவேசிமுறைமையெடுப்பார்கைப் ௭௬௬
பிள்ளையோநீயுமென்னபேய்ப்பிள்ளாய்மாப்பிள்ளைமார்
கள்ளரைப்போலேதிரியக்காரணமென்மெள்ளமெள்ள ௭௬௭
ஓடக்கடக்கவிட்டாலோடக்காறன்றலையிற்
போடுவதுசொட்டென்பார்பூதலத்தோர்-வாடி ௭௬௮
சிலேது தலராய்நானுனக்குச்சேர்த்தமருந்துக்கு

மலையுநகர்ந் துவருமேழுலைவயிற்றைத் ௭௬௯
தொட்டதோகன்னஞ்சுரிக்கதோபூந் தகரை
யிட்டதோமேனியினைத்ததோதொட்டவனை ௭௭௰
விட்டுப்பிரிந்தாக்கால்வேறுபிழைப்பிலையோ
முஷ்டிவாங்கிப்பயலேமோப்பாச்சு-கெட்டிகெட்டி ௭௭௧
ஊரைவிடப்பற்றென்றுரைநேர்தாரிவிட்டிறப்புக்
கூரையிடுலொண்டிக்கேட்டுக்கொண்டேனூன்-மேனைதப்பி ௭௭௨

சண்டையிட்டமைகூறல்.

நன்றிமரந்தாரைநடுக்கேட்குமோதெய்வம்
என்றுசொல்லிவந்தேனெதிரோநான்-என்றவுடன் ௭௭௩
ஆங்காரமிட்டாளென்னுஸ்தியெல்லாந்தன்கையால்
வாங்காமல்வாங்கிவிட்டமாமியார்-ஆங்குவரும் ௭௭௪
பேய்மடையார்பெண்ணும்பெருங்குளத்துநீரைத்தன்
வாய்மடையாலேயுறுஞ்சுமாமியார்-ஈபாரைப் ௭௭௫
புல்வாயைக்கண்டபுலிபோலப்போய்ப்பிடிக்கும்
வல்வாய்கிழகெட்டைமாமியார்-புல்லுவிழுங் ௭௭௬
கோப்புளதன்மூப்பைகொடுத்திளமைவாங்கமொட்டை
மாப்பிளைமாரைத்தேடுமாமியார்-கேப்பைக்கும் ௭௭௭
பிஞ்சுமரங்காய்க்கும்பிளவுக்கும்வெற்றிலைக்கும்
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்குமாமியார்-மஞ்சத்தே ௭௭௮
தேற்றிதனைமுன்புசேர்ந்தபணக்காரமுறை
மாற்றிமகளுக்கிணங்குமாமியார்-போற்றிவைத்த ௭௭௯
காசழியாமற்றிரியுங்காவிரிப்பற்காரரைத்தான்
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு ௭௮௰
சேயிழையைச்சேர்ந்தவரைத்தேற்றிக்கழுத்தறுக்கும்
ஆயுதம்போலுங்கருநாக்கத்தையார்-மேயவொரு ௭௮௧
செம்பிலேதண்ணீருஞ்சீலைப்பாயுங்கொடுபோய்
அம்பலத்திலேயடுக்கைமத்தையார்-வெம்புலிபோல் ௭௮௨
தாஷ்டிகரையும்பிடித்துத்தாலகத்திம்மாவென்
றூட்டிபணம்பறிக்குமத்தையார்மோட்டுப் ௭௮௩
பொலிப்பாட்டைப்போலேபுறப்புட்டாளன்று
பொலிப்பாட்டுப்பாடப்புகுந்தாள்வலுத்தவர்போல் ௭௮௪
என்னசொன்னாய்பார்ப்பாநீயின்னமொருகாற்சொல்லு
கன்னத்திடலயறைவர்காணேனே-சின்னஞ் ௭௮௫
சிறிக்கியுனக்குநன்றாய்ச்சிக்கினேனோநான்
இறுக்குப்பிடித்தகிழவி-உறுக்கி ௭௮௬
வசமாக்கவல்லோவசைசெய்தாய்வைப்பு
விசமாச்சோகுல்லாலிநீயே-பசிவேளைக் ௭௮௭

சேதுகொடுத்தாய்நீயித்தனைகாலந்திரிந்தாய்
பேதமினிப்போவென்றாற்போகாயோ-மாதுனக்கு ௭௮௮
தாய்மாமன்பிள்ளையோதாலிகட்டிகந்தேனோ
நீமாத்திரமாங்குநேசமோ-மாமிகிட்டத் ௭௮௯
தந்தபணசேதமுண்டோசாண்வயிற்றுபிச்சைக்கு
வந்தவனும்பெண்ணுக்குமாப்பிளையோசொந்தமாக ௭௯௰
இட்டக்கிடக்கக்கிடைப்பாளேதேவடியாள்
இட்டொருவனைச்சேர்வதெத்தனைநாள்-குட்டிணியுன் ௭௯௧
வாணாளைவாங்கிவிடுவேன்வாயைமூடின்வயிறு
சாணோமுழமோசவுங்கலே-நாணமற்ற ௭௯௨
மூடாவிதேதுமுழக்கம்வெளியிலே
வாடாவொருகாலமதிகேடா-ஓடலாம் ௭௯௩
என்றுபுடவையிறுக்கினாள்நானவளைத்
தின்றுவிடத்தக்கசினமானேன்-நன்றியற்ற ௭௯௪
பாவிநீகேளாய்பழங்கதைசெந்தீயிடைப்பட்
டாவிவிடும்பாம்பையெடுத்தாதரிக்கத்-தாவி ௭௯௫
நளன்கரத்திற்றீண்டியதுநன்மைசெய்யக்கர்மம்
விளைந்தகதையென்னளவுமெய்யேஉளம்பதறிப் ௭௯௬
பேசலாமேநீபுறம்விடலாமோதுடுக்காய்
ஏசலாமோகொடுக்கவில்லையோ-ராசியமேன் ௭௯௭
செட்டிகளுக்கெல்லாந்தெரியாதோநான்கொடுத்த
கட்டிவராகன்கணக்குண்டோ-தட்டார் ௭௯௮
அறியாரோவூராரறியாரோவுன்னெஞ்
சறியாதோதோஷமலவோ-மறுபடியுன் ௭௯௯
கிட்டவைத்தவெண்முடிப்போகேளாய்கிழப்பிணமே
எட்டுத்தலைமுறைமட்டிக்குண்டே-கெட்டபுத்திக் ௮௱
கந்தலேயென்றேன்கவட்டினுழையடா
சந்தையின்மானங்கெட்டாய்சரசம்போமுன்றுன் ௮௱௧
வளவிற்சிலவுடைமைவைத்துவைத்தேனென்றாய்
களவாயப்பயலேகண்ணே-கிளரட்டோ ௮௱௨
பின்னாசைவேண்டாம்புறப்பட்டுபோவென்றாள்
அன்னோமோர்வடுகனுயுதம்-கன்னம் ௮௱௩
பரிசையுந்தன்காலிலேபாப்பாசும்போட்டுப்
பெரியபட்டைநாமமுந்தன்பின்னே-ஒருவனுமாய்க் ௮௱௪
கக்கத்தில்வாளிடுக்காச்சூழச்சென்றுவந்தான்
பக்கத்திலேசலிகைபாராட்டிவெட்கமறந் ௮௱௫

தாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில்
வாடாவென்றென்னைவரட்டிக்கோய்ப்-பாடி ௮௱௬
மடியைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன்
தொடையிலடிப்பட்டதவள்தோற்பை-மடிநழுவித் ௮௱௭
தொங்கியகைவாலென்றுதூக்கிச்சுருட்டியெடுத்
தங்கையினாற்கக்கத்தடக்கினேன்-மங்கைதனைத் ௮௱௮
தள்ளினனஞ்சாறுதாக்கினேன்பொக்கைவாய்க்
குள்ளிப்பிடித்தாள்குடுமியை-உள்ளோரார் ௮௱௯

சபையேறினமைகூறல்.

கூடிவிலக்கிவிட்டார்கூகூவென்றம்பலத்தில்
ஓடினாள்நானுமுடன்சென்றேன்-தாடகைபோற் ௮௱௰
போயப்புழுதேபுகுமண்டபத்திலந்தக்
கோயிற்றலத்தாரைக்கூட்டமிட்டாள்-வாய்னீட் ௮௱௰௧
டழுதாள்மகளையருகேநிறுத்தித்
தொழுதாள்மடைமாறிச்சொல்வாள்-பழியஞ்சிப் ௮௱௰௨

இழவிஅறிவிப்புக்கூறல்.

பட்டசேதேவேங்க்ரப்பட்டரேமீனாட்சி
பட்டரேகாமாட்சிபட்டரே-இஷ்டகர ௮௱௰௩
இங்கையரேநாரணையதீட்சிதரேசெவ்வந்தி
லிங்கரேயெங்கள்சொக்கலிங்கையரே-சங்கரா ௮௱௰௪
சாரியாரேயனந்தசாஸ்திரியாரேகைவிஸ்
தாரியாரேகோயில்தானிகரே-ஊருக்குள் ௮௱௰௫
நியாயமிலையோநடுவிலையோபார்ப்பாரம்
பேய்பிடித்ததேயெனதுபெண்பிள்ளையைக்-கோயிலுக்குள் ௮௱௰௬
அஞ்சாறுமாதமாயாடிபாடிக்கிரியச்
சஞ்சாரங்கண்டரோசர்ப்பனையாப்-பஞ்சமாப் ௮௱௰௭
பாவியிந்தப்பார்ப்பான்பணயங்கொத்தொருநாள்
மேவிலருந்தான்விடிந்தவுடன்-போவானென் ௮௱௰௮
றெண்ணினேனென்னமருந்திட்டானோவென்னவகை
பண்ணினானோமதநூல்படமோ-பெண்ணணங்கை ௮௱௰௯
வைப்பென்றுபேரிட்டான் வட்டிலிற்கஞ்சிக்குமகள்
உப்பென்றகேளாதுபாயமிட்டான்-கைப்பிடிக்குக் ௮௱௨௰
கொண்டானைப்போலக்குடிலமிட்டான் ஆண்பூண்டு
கண்டாலும்பேசாமற்காட்டிட்டான் ஒண்டொடிக்கு ௮௱௨௰௧
வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான்
கோடைச்சழிந்தலைவத்துக்கொள்ளையிட்டான்மாயோர் ௮௱௨௰௨

பட்டிவைக்கிறேன்பலதெம்பைக்கூட்டிச்சம்பாநெல்
கட்டிவைக்கிறேன்பொற்கடாரங்கள்-எட்டேழு ௮௨௩

தூங்கவைக்கிறேனென்றான்சோத்துக்குத்தூங்கவைத்தாட்
டேங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான்-வீங்கலிவன் ௮௨௪

இங்குவர்த்தமானமுதலாயேதுகொடுத்தான்றனக்குக்
குங்குமச்சம்பாவரிசிகொள்ளவென்றும்-பொங்கலுக்குப் ௮௨௫

பாசிப்பயறென்றும்பாலென்றுநெய்யென்றுந்
தோசைக்குளுந்தென்றுஞ்சோமனென்றும்-பூசுவதும் ௮௨௬

கானசவ்வாதென்றுமலகுபாக்கென்றும்ரச
பானவர்க்கமென்றும்பகலிராவா-ஏனோ ௮௨௭

படுக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான்
கொடுக்குங்குடன்போற்கொடுத்தேன்-மடக்கொடியாள் ௮௨௮

பொட்டழியக்காதிற்பொகடியொருசோடழிய
ஒட்டழியத்தோற்றேனுடைமையெல்லாம்-பட்டிமகன் ௮௨௯

மோகினிமந்திரமுழுதுமறிவான்மதன
னாகமங்களெல்லாமவதானம்-நாகரிகம் ௮௩௰

பொட்டறிவானுந்தண்டுப்பூச்சறிவானும்போகக்
கட்டறிவானுமொருநாள்கைவாளத்தட்டறையிற் ௮௩௧

சோதித்தேன்சின்னமயிர்த்தோலுரிக்கொம்புமவி
பூதிக்கிழியும்பொடியுமில்லையேதுக் ௮௩௨

குருட்டிவைத்தாலேசிலதுவுண்டையுநான்கண்டேன்
இருட்டுப்புகட்டனென்றுதொங்கேன்-அரைக்காசுத் ௮௩௩

தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பாரென்றிங்கே
கொண்டுவருவானோகொண்டுவரான்-வண்டனிவன் ௮௩௪

மானேர்விழியணங்குமாதவிடாயானக்கால்
தானேவிடவருவான்தண்ணீரை-மானிடமோ ௮௩௫

அல்லும்பகலுமடைத்தகதவைத்திறவான்
மெல்லியரைச்சற்றும்வெளியில்விடான்-சொல்லுவதென் ௮௩௬

பத்துவிசையாம்பகலுக்கும்ராத்திரிக்கும்
பத்துவிசைக்குமென்றன்பாவைபோல்-உத்தரிக்க ௮௩௭

ஆர்க்குமுடியுமிவனாலுமுன்பிறப்பில்
ஊர்க்குருவியோபெண்ணுடம்பிலே-தீர்க்கவொண்ணு ௮௩௮

கோவொதுங்கவிட்டானூறுவயதுப்பயிர்க்கும்
பூவொதுங்கவிடான்பொறுபொறென்று-பாவிமகன் ௮௩௯

சொர்ணங்கொடுப்பனென்றுசொன்னதுவுண்டல்லாமல்
என்னகொடுத்தானிதுவரைக்கும்-என்மகட்கு ௮௪௰

போகங்கொடுத்தான் முலையமைப்புக்கொடுத்தான்
மேகங்கொடுத்தான் மெலியவிட்டான் ஆகம் ௮௪௧

சிரங்காணுள் தம்பியிட்ட தீமருந்தால் மாது
குரங்காணுள் குத்திருக்கிருமல் கொண்டாள் - மருந்து ௮௪௨

கொடுப்பவரார் புண்ணுக்குங் கூசாமற்கிட்டப்
படுப்பவராரென் மகளைப்பாவி கெடுத்தானே ௮௪௩

கேட்டுவந்து சேருஞ்சிறுவயதிற்போக்கறுவான்
வீட்டிற்புகுந்தான் விடுதிபோல் - நாட்டமாய்க் ௮௪௪

கூடவந்தங்கிருக்கக்குடுமிக்கலைவைக்கண்
டாடவர்களெல்லாமகன்றுவிட்டார் - தேடாமன் ௮௪௫

நித்திரைக்குப்போனனூறுசித்தங்கொடுத்துவந்த
முத்திரைப்பண்டாரமேமோடிவைத்து - மெத்தக் ௮௪௬

கறுப்பானுமாலைகட்டிக்கன்னியப்பன் முற்றும்
வெறுப்பானுன்மெய் காவலெவன் - சிறிக்கிமேல் ௮௪௭

ஆசைவைத்தவத்தியாரையர் முறைதப்பிதமாய்
பாஷைவைத்துப்போனூர் பாகையனூர் - காசுபணம் ௮௪௮

மாரியெனச்சொரிந்த மாரியப்பன் சண்டையிட்டு
விரிவளவிற்போனுன் மீள்வானே - தேரேறப் ௮௪௯

பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனந்திசந்தி
சன்னையிட்டுப்பார்த்தான் சலித்துவிட்டான் பின்னை ௮௫௦

வரத்துமில்லைத்தானுவழக்கானோர் சேலை
தாச்சொன்னவினைக்குச் சண்டைக்கொருப்பட்டான் ௮௫௧

வைதானென்னையுமயிர்பிடித்தான் செய்யாதுஞ்
செய்தான் மகளைச் செவியிலே - கையால் ௮௫௨

அடித்தான் விலக்குமவரை முழங்கையால்
இடித்தான் காத்தினுலென்னை - இடுப்பொடிய ௮௫௩

போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன்
கேட்டார் சிரிக்கவல்லோ கீர்த்திவைத்தான் - ரூட்டிசெய்த ௮௫௪

தேதென்றுநீர் கேட்டாலென்ன சொல்வாள் தாய்க்கிழவி
சூதென்பான் வாரிச்சொரிந்தபொருட் - சேதம் ௮௫௫

கணக்குண்டோவென்பான் களரிமெச்சவிந்தத்
துணிக்குண்ணியோகொடுப்பான் சொர்ணம் - பணக்கவளம் ௮௫௬

மாங்கரிட்டுக்கட்டிவளர்த்தகடாக்கையிலே
பாய்ந்தகதைமெய்யாப்பலித்ததே ஈந்ததில்லை ௮௫௭

தாயமகளுமொருதாமரையினிராமேனும்
பேயுமிரங்குமே பெண்ணென்றுன் - தூயவரே ௮௫௮

கண்டகெட்டேயிக்கணக்குப்பார்த்துப்பொருளைத்
தெண்டித்துவாங்கியிந்தச்சேயனை நீ-கண்டிப்பாய் ௮௫௯
மெட்டுக்கடக்கவெருட்டுமென்றுனொற
சட்டிக்குலைபணத்தாமர்த்திப்-பட்டன்மார் ௮௬௰
இல்லென்றுருன்வாழ்க்கைதீர்ப்பாக்கியமும்
சொல்லென்றூர்சொல்லத்தொடங்கினேன்-கல்லும் ௮௬௧

தன்னறிவிப்புக்கூறல்.

கரையுமேயாயமாற்கள்ளிசொன்னவார்த்தைக்
குரையுமெதிர்வாகருமுண்டோ-ஒருகாள் ௮௬௨
கடக்ககலைத்தேனீர்கடுக்காட்டுநீல்
தொடர்கதானேச்செட்டிக்ளைச்சுதாய்-கடந்தவன்னைப் ௮௬௩
பத்திரத்தாற்றப்பிப்பழையனூரம்பலத்தில்
மொய்த்திருந்தவேளாளர்முன்சென்றுடைகட்த்தொருப்போல் ௮௬௪
ஆலங்காட்டுப்பேயதோவருகுமெதுவ்வளையாள
கோலககாட்டிப்பகட்டிக்கொண்டென்றுன்-நீல்பெண்ணும் ௮௬௫
கள்ளிமுலைப்பாலுக்கழுதகண்ணீருதலீல்கமுதக
கள்ளியொன்றைப்பிள்ளைபா [illegible] ௮௬௬
காட்டிலேகண்டதுண்டோகல்லோசேயன்னைகூக்
காட்டிலேவிட்டார்கணவனூர்-யீட்டுமவர் ௮௬௭
கிட்டிவந்தார்கான்பயந்துகெஞ்சிவந்தேன்-வாருருவி
வெட்டவந்தார்முன்னாள்விதிப்படியோ-முட்டமுட்டப் ௮௬௮
பேயென்றுரென்னையிந்தப்பிள்ளைகளிக்கொம்பென்றூர்
தாயென்றுவில்லைதமரில்லை-தூயவரோ ௮௬௯
பேர்விட்டபான்முலைக்கீழ்ப்பிள்ளைவைவிட்டாலதுகா
ஆர்கிட்டப்போமென்றறியலாய்-பாருமென ௮௭௰
விட்டாள்சபையிலதுமெள்ளத்தவிழ்ந்துமடி
தொட்டேறச்செட்டிதனுக்கென்றுள்-ஒட்டாரம் ௮௭௧
பண்ணுகிறான்செட்டியென்றூர்பார்க்கவெல்லாமவ்வேள
கண்ணூனைநீலியென்றுன்காணுங்கிப்-பெண்ணலது ௮௭௨
சத்துருபேயாகிசசதிசெய்தால்கால்களுக்
கித்தனைப்பேரும்பழிகாரெனன்றுரைத்துப்-பத்திரத்தை ௮௭௩
வாங்கிவணிகனையர்ர்க்கவிட்டநீலியையும்
பாங்கியொருவீட்டிற்படுக்கவைத்துத்-தாங்குமாய் ௮௭௪
கூட்டிக்கதவடைத்துப்போயினூர்பேய்மதியோர்
வாட்ட முறைநீபழியாச்சுதென்றே-உவட்டி ௮௭௫
கதவுதானவ்வணிகன்பிடரிதனைக்கையால்
பிடிக்கவிருத்தாருதரம்-குத்தாரம்பின் ௮௭௬

கீண்டாள்பிளந்தெறிந்தாள்நெஞ்சிற்சூடர்மாலை
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின் ௮௭௭

கண்டார்வழக்கையெந்தக்கம்பனையார்சற்பனைகள்
விண்டாலும்பெண்வார்த்தைமெய்யாங்காண்-அண்டினர்க்கூ ௮௭௮

றுக்கினைக்காட்டிலடித்துப்பரித்தூரிற்
கூக்குரலுமிட்டாற்பின்கூறுவதென்-வாய்க்கலினம் ௮௭௯

பூண்டபரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி
தோண்டுதென்றானினிமேற்சொல்வானேன்-ஆண்டவரே ௮௮௰

அந்தணரேநானிவண்மேலாசைகொண்டேன்மோசமதாய்
இந்தவிதிவருமென்றெண்ணாமல்-முந்தமுந்தக் ௮௮௧

கூனிமருந்தையிட்டுக்கூறுகொண்டாளன்றுமுதல்
மேனியெடுக்கிலேன்மெய்ம்மறந்தேன்-நானிவட்கு ௮௮௨

முன்னாட்கடனேமுதலிடுவார்போற்கொடுத்த
பொன்னேபொற்பூந்துகிலோபூஷணமோ-சொன்னசொல் ௮௮௩

லத்தனைக்கும்வீணையாழிச்சதெல்லாம்யான்கணக்கிட்
டெத்தனையென்றுகட்டியம்புவேன்-நித்தநித்தம் ௮௮௪

வல்லார்தனத்திசொந்தவைப்பென்றுபேரெனையும்
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர்-நல்லவள்போல் ௮௮௫

உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத்
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப் ௮௮௬

பேசினாள்சும்மாப்புறப்பட்டுப்போடாவென்
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் ௮௮௭

முந்திமடிபிடித்தாள்முந்தானையைக்கிழித்தாள்
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள் இந்தநாணத் ௮௮௮

தட்டானைவந்தென்றலையிலொருகுட்டு
போட்டானென்குட்டெல்லாம்போச்சையா-மோட்டு ௮௮௯

வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனானால்
விடுவானோபுண்ணியவான்விட்டான் இந்நூறாய் ௮௯௰

அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த
இந்தக்குமரியெனென்றாளோ-சுந்தர ௮௯௧

கலைவாணுசலணக்கேகாதலென்மேலுண்டோ
இலையோநினக்கென்றேனெட்டித்-தலைமேற் ௮௯௨

சளக்கென்றடித்தாள்சதிகாரிவீட்டு
விளக்கிலடித்தாள்பின்வெள்ளி-முளைக்குமுன்னே ௮௯௩

முந்திபோட்டுமேலேமுக்காலுமாசையென்று
சந்திவீரப்பன்முன்னேதாண்டினான்-வந்தொருவன் ௮௯௪

முத்தங்கொள்வாய்க்குமுன்னொருவன்தான்கொடுக்க
அத்தம்பலங்கொடுப்பார்க்காணையுண்டோ-வித்தகமோ ௮௯௫

மேனியிட்டெல்லமெழுகுபிள்ளையார்போலே
யானிருக்கதிர்க்காறியிரோ-கூனியெனக் ௮௯௬
கிட்டமருந்தாலுயிலவள்கொடுத்தபுண்ணாலும்
ஒட்டியுலர்ந்தவுடலானேன் மட்டைக் ௮௯௭
கிழுக்கெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-சிறக்கமுழு ௮௯௮
மாணிக்கமொன்றுமணிமுத்தோருசிறங்கை
பேணிவைக்கச்சொல்லிவைத்தேபெண்ணிடத்தில்-ஏணியைவைக் ()
தேறவிட்டுவாங்கியெனையிக்கோலங்கொண்டகழன்
மாறிவிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனைக்குக் ௯௱

பின்னும் தாய்க்கிழவி அறிவிப்புக் கூறல்.

தஞ்சமில்லேனீங்களேதஞ்சமென்றேனங்கோரம்
கொஞ்சமுலைக்காரிகுடிகுடிப்பாய்-வஞ்சக ௯௱௧
இருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி
ஒருமுடிப்புவைக்கவொருமுண்டோ-மருதன் ௯௱௨
குடியிருக்குதேபழகர்கோயில்பதினெட்டாம்
படியிருக்குதேமுகலைப்பள்ளம்-கடுபயம் ௯௱௩
சொல்லுதேசிங்கம்பிடாரிதூமையாமல்
கொல்லுதேதீர்த்துக்கொடுக்கிறோம்-அல்லவென்றால் ௯௱௪
எங்ளைக்கிடத்தியெனதுமகள்தானிட்டமகள்
தன்னைக்கிடத்திநான்தாண்டுகிறேன்-சொன்னதென்ன ௯௱௫
தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்கும்
பிள்ளைபோலென்றான்பெரியோர்முன்கள்ளிசொல்லே ௯௱௬

சபையார்விசாரணைகூறல்.

கேட்டுநகைபுரிந்தார்கிட்டயழைத்தென்னைபவர்
கூட்டத்துக்குள்ளிருக்கிக்கூறுவார்-வாட்டமுற்ற ௯௱௭
மாதவரோலேசிமருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த ௯௱௮

மருந்திட்டகதைகூறல்.

முத்தனையாள்நேற்றிரவுமூலைக்குள்வைத்துநிறை
குத்தியர்க்குடித்துக்கூட்டமிட்டிவ்-வைக்கமுதல் ௯௱௯
வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத்
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் ௯௱௰
தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன்
விலக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மதக்கலமாய்த் ௯௰௧
திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்குண்டுணியாய்
கன்னியங்கேவந்தாள்கலைநெகிழ்ந்துஉண்ணுனும் ௯௰௨

அரக்குவெறியாலவனென்மேல்வீழ்ந்து
குரக்குவெறிபோறகுறியிற்குய்யம்-பொருந்தியெனை ௯௧௩
பண்ணுசுரக்காலமெல்லாம்பண்ணினுளார்க்குமொரு
பெண்ணுமசையாளுற்பிடிக்குமே-அண்ணர்களைச் ௯௧௪
சம்போகஞ்செய்வதுபோற்றன்னுலேயாவதெல்லாம்
அம்பாகுங்கண்ணிபார்த்தாகாமல-வெம்பியே ௯௧௫
காட்டுமறுக்குதக்கடைமருந்துமுன்மருந்தும்
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல்-நாம்வர ௯௧௬
வொட்டுமோவெனனுடங்கைவாகத்திரிந்த
வட்டமுலையாளசொல்வகைவகையாற்-சிட்டரே ௯௧௭
இந்தவிதம்நானறிந்தேனென்றுரைத்தேகேட்டுநல்ல
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள்-சிந்தைநொந்த ௯௧௮

சபையார்தன்னைத்தேற்றினமைகூறல்

பூசுரரேவேதப்புனிதரேயம்பலத்தில்
தாசியுடனேறத்தகாதுகாண்-வேசியொரு ௯௧௯
செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகதை
ஐயரோகேட்டாமறியீரோ-வைகயில் ௯௨௰
திரவியத்தைவாங்கியுமைச்சீவனுடன்விட்ட
மரியாதைக்குண்டோவழக்குப்-பெரியாரே ௯௨௧
வேதியராயுள்ளவர்கள் வேசியரைக்கண்டாக்கால்
காதவழிவிலங்கக்காரியங்காண-ஓதுமறை ௯௨௨
மந்திரநூல்வாயான்மதுவாரசங்கொள்ள
வந்தவசைதுணிவாயெண்ணினீர்-சிந்தைமயல் ௯௨௩
தீர்த்ததாசிக்குத்திரவியமெல்லாங்கொண்டு
தீர்த்ததாசிக்கடனைத்தீர்த்துவிட்டீர்-கீர்த்தியா ௯௨௪
நாமறியாக்கூத்தாடித்துவிட்டீரும்வளவோ
மாமறையோர்க்கெல்லாம்வசையாச்சே-சேமநிதி ௯௨௫
தன்னைப்பறித்தாள்தாசசெல்லுமென்றீரப்
பொன்னைவிளக்கேட்கப்போகுமோ-பொன்னைப்போற் ௯௨௬
கூட்டியபசங்கேனெடுத்துக்கொண்டபேர்தம்மையவர்
ஓட்டியவிதங்கேட்டதுண்டோகாண்-ஆட்டரவம் ௯௨௭
வாய்க்குளகப்பட்டதுணைகேழும்யானை
வாய்க்குள்ளகப்பட்டவான்கரும்பும்-நீக்குள்ளே ௯௨௮
விட்டகறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்க
பட்டகமரில்விட்டபாற்குழம்பும்-கட்டுபுகழ் ௯௨௯
நான்மறையிற்றேடாப்பரமனுத்தர்கைப்பொருளும்
வாங்கினுவிப்பொருளும்வாங்கலாம்நாக்கன்சொன்ன ௯௩௰

புத்திவழியின்றும்பொருளறிதோர்கற்ற
வித்தையிலேசெம்பொன்விளையுமே-எத்தும் ௱௩௧

மாத்தையருக்கேத்திலும்பத்தத்தனையாய்
வரத்தக்கயோகம்வருங்காண்-கருத்திலே ௱௩௨

எண்ணிவிடையாதிருக்கமூர்க்கேகுமென்று
புண்ணியர்தாந்தன்மனையிற்போயினாற்-பெண்ணணங்க ௱௩௩

(தான்கலக்கித்தெளிந்தமைகூறல்)

பின்னடத்திசெல்லினவன் பின்னழகைப்பாரேனே
முன்னடதிச்சென்றான்முழுப்பாவி-நன்னீர்க ௱௩௪

டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின்
ஏகுபறவைகள்போலேகினான்-மோகமுற்று ௱௩௫

என்னைக்கிழவியிடச்செய்தெனைப்பிரியாக்
கன்னிதனைப்பிரிவுகண்டானே-இநாட்டில் ௱௩௬

மாட்டுமகித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப்
போட்டுப்புறப்பட்டுபோவோமோ-நாட்டமுற்ற ௱௩௭

ஊரெங்கேதோழரெங்கேயுற்றாரெங்கேமனைவி
யாரெங்கேயஷ்டாவதானியென்றும்-பேரெங்கே ௱௩௮

நாணுவிதமுமெண்ணிநட்டாற்றுக்கோரையைப்போல்
ஆனேனெனக்கலக்கமாகினேன்-யானே ௱௩௯

(ஆலயஞ்சென்றுதெரிசித்தமைகூறல்.)

ஏனைத்தேற்றிக்கொண்டுபோவெங்கள்சொக்கலிங்கந்
தனைப்போற்றியென்கவலைசாற்றி-அனுக்கிரகம் ௱௪௰

பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரம்யான்வலமாகச்
சுற்றிவைரவசுவாமியையும்-முற்றும் ௱௪௧

வணங்கியபொற்கம்பந்தனைக்குவடபால்
இணங்குந்திருவாசற்கிப்பால்-மணங்கமழ்பூ ௱௪௨

மாலைநிறைத்தமணிவாசன்முன்முகப்பிற்
சேலைநிறைத்ததிருவிளங்கும்-பாலரவி ௱௪௩

காந்திபரவினைத்துக் கட்டளைக்குக்கட்டளையாய்
வாய்ந்ததெல்லாஞ்சொர்னமயமாகித-தேய்ங்கழுனை ௱௪௪

நெட்டிலேவேற்சங்கநிதிக்காசனுபாணம்
மெட்டிதிறந்தபிரகாசம்போற-சட்டப் ௱௪௫

புழுகுமணமும்பொலிந்தவரைக்கண்டு
தொழுதேனதிசயமுந்தோன்றப்பழுதில் ௱௪௬

மறையோன்மணியம்வரதையனென்போனவ்
வறைவாசலிலிருந்தானையா-செறிபுடையாம் ௱௪௭

(நாகமகூலேந்த்ரன்கட்டளைக்கண்டமைகூறல்)

ஆருபுயமீதென்றே னுடலபயன்முதலைக்
தாருவுமேருக்கடம்புயமால்-பாராளும் ௱௪௮

யோகமகாராஜ னென்பனூர்வாழ்பெரிய
நாகமகூலேந்த்ரநபாலன்-தோகைமயில் ௱௪௯

மீனாட்சியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும்
தானாட்சியானவுபசாரமோ-மேன்மையாய் ௱௫௰

ஷேகமதுமாலைசிறப்புமுதூதியமுத
லாகநடப்பிக்குமறையென்றான்-மோகமக் ௱௫௧

(இழந்தபொருளுக்கிரங்கினமைகூறல்)

கிட்டணையுங்கன்னிக் கிரைத்ததெல்லாமிப்படியோர்
கட்டளையாச்செய்துபலன்கண்டோமோ-சிட்டர்தொழும் ௱௫௨

அங்கயற்கண்ணம்மை கழகுதிருவாட்சியொன்று
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கரர்சொக்க ௱௫௩

கையர்மகிழ்ந்தேற வபிஷேகபண்டாரம்
செய்ததிருத்தேர்போலச்செய்தோமோ-வைபோகம் ௱௫௪

பொற்பதுமண்டபத்திற் பின்புறமுமுன்புறமும்
பொற்கழுகொண்டழுத்திப்போட்டோமோ-மற்றுமெங்கள் ௱௫௫

மாலழகருக்கு வயிரத்தாள்மின்னெறித்தாற்
போலழகாமங்கிபண்ணிப்பூட்டினமோ-சாலையறம் ௱௫௬

செய்தோமோகோதானஞ் செய்தோமோபூதானம்
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோ-துய்யநிதி ௱௫௭

ஆரிடத்தில்வாங்கி யரும்பலனைத்தேடுவோம்
பேர்படைத்தபெஞ்சைப்ரதாபனென்ப-தூர்படைத்த ௱௫௮

(அப்பிரபுவிடத்துக்குச் சொல்லத்துணிந்தமைகூறல்)

ஐயன்பெரியநா கையனிடஞ்சொல்வோமோ
செய்யுமறைவேதியரே செப்புமென்றேன்-எய்துதிருப் ௱௫௯

பாற்கடலுக்கேகினர் பால்குடியரோவிதற்கு
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு ௱௬௰

தெய்யுமழைக்கு ணையாதபெருமவன்
கையிலேற்காதவருங்காணேனன்-ஐயமின்றிப் ௱௬௧

போமெனவெண்ணீறுதந்து பூசிவிட்டார்சந்தனத்தை
யாமெனச்சொக்கேச ரடிபணிந்து-மாமேவு ௱௬௨

கூடலழகர்மதன கோபாலர்பூந்துளவ
வேடலருந்தார்வீரராகவமால்-மாடேறும் ௱௬௩

நல்லாண்டவர்யார்க்குமிம்மையிலேநன்மைதரு
மல்லாண்டவர்பாதமவாழ்த்தியே-செல்வ ௱௬௪
மடக்கையல்கயற்கண்வாசலற்றச்சாலை
கடந்துமறுவிதிகடந்து-கடந்துவரப் ௱௬௫

மதுரையினின்றுஞ்சென்றமைகூறல்.

பின்னிழுக்குமோர்காலைபெண்ணாசைமாமிசினம்
பின்னிழுக்குமோர்காலைமூன்றுதரம்-பின்னே ௱௬௬
திரும்புவதுமீள்வதுமாய்ச்சீமாட்டியாசைக்
கரும்பைநினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் ௱௬௭
குன்றிருக்குமென்முலைமேற்கூடிக்கலந்தசுகம்
இன்றொருத்தன்பங்காயிருக்குமோ-மன்றலர்ந்தார்ச் ௱௬௮
சுற்றுடனான்படுத்ததூங்குமஞ்சமீதிலொரு
பற்றுப்பயலும்படுப்பானோ-மற்றுமந்தச் ௱௬௯
சந்தியிலேமாமியிட்டசண்டையிலேவந்தவொரு
தொந்திவடுகன்சுகிப்பானோ-முந்திவினை ௱௭௰
யாடியனுராகம்பாடியுறவாடினன்
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ-மேடையின்மேற் ௱௭௧
கிண்ணமுலைமேற்பதித்தக்கிள்ளைபார்த்தென்னையுஞ்சற்
றெண்ணிநெடுமூச்செறிவாளோ-எண்ணிற் ௱௭௨
படாதபாடித்தனையும்பட்டேனென்பாவம்
இடாதோபிரமனார்க்கென்றே-தடாமல் ௱௭௩
வடக்குமுகக்கோட்டைவாசல்நடுக்கட்டு
முடக்கில்வருபோதெனக்குமுன்னே-அடக்கமுள்ள ௱௭௪

ஞானியாரைமறுபடியுங்கண்டமைகூறல்.

மானுபரஞானியையாம்மதுரைக்கண்
டேனுவந்தாலென்வேதிராக-நானவனைக் ௱௭௫
காணுமளவிற்கனவாண்டவன்போலென்
சானுடம்புக்குன்றியொருசாணானேன்-நாணமாய் ௱௭௬
மாமிதனைக்கண்டமருமகள்போலானேனைச்
சாமியெனையன்பாய்த்தழுவினால்-காமறிய ௱௭௭
ஆனைபோலேயிருந்திரையவேயுமுடம்பு
பூனைபோலேயொடுங்கிப்போவானேன்-ஆனவிது ௱௭௮
என்னவகையென்றான்மற்றேதுவகைநீர்முதலே
சொல்வகைகேளாததோஷவகை-முன்னுமது ௱௭௯
கையைவிட்டுமேசிமகள்கால்பிடிக்கச்சென்றேனுன்
மையலையிட்டகண்ணிக்குமாலானேன்-பையவுண்டைக் ௱௮௰
கூட்டிவிட்டாள்கைப்பொருளைக்கொள்ளையிட்டாள்கைக்குரங்காய்
ஆட்டிவிட்டாளிக்கோலமாக்கிவிட்டாள்-கேட்டவர் ௱௮௧

ஞானியார் தேற்றினமைகூறல்.

நகைப்பாவொன்றேனிதற்குநாணமேன்யார்க்கும்
வகைதப்பாமோசம்வாராதோ-பகுத்தறிவாம் ௧௮௨
வண்டாடுஞ்செங்காந்தள்வாடையாலேவசைந்து
கொண்டாடுவோர்கைக்குணங்காட்டக்-கண்டிடீர்பின் ௧௮௩
இந்திரன்மெய்யோனிக்கணானைஞ்சூரானதுவும்
அந்தணனார்சென்னியிலொன்றற்றதுவும்-சுந்தோப ௧௮௪
சுந்தரமடிந்ததுவுஞ்சுக்ரீவனால்வாலி
மூந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-கந்தன் ௧௮௫
மாமானதாயிலங்கைவாள்வேந்தன்சிந்து
சிரமானதும்வச்ரதேகத்-தாரம்படைத்த ௧௮௬
கீசகனார்மாண்டதுவுங்கேட்டிலீரோபெண்
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரே ௧௮௭
கைப்பொருள்போச்சென்றுகவலையேன்கல்வியொன்றால்
மெய்ப்பொருளாம்பாவலர்க்குவேளாண்மை-இப்புவியில் ௧௮௮
மன்னனுமாசறக்கற்றோனுஞ்சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத் ௧௮௯
தன்றேசமல்லாற்சிறப்பில்லைகற்றோற்குச்
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற ௧௯௰
அவ்வைசொன்னநீதியறியீரோநீரினிமேல்
இவ்விடம்விட்டுங்களூர்க்கேகுமென்று-தெய்வ ௧௯௧
மறைவல்லோனென்னைவழிவிடுத்துப்பார்த்துத்
தறுகின்றானென்மேற்றயவால்-நெறியுடனே ௧௯௨

ஒன்பதூர்நோக்கிச்சென்றமைகூறல்.

ஐம்பதூர்க்கேகியலைந்துபலனேதென்றே
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் ௧௯௩

நற்சகுனங்கண்டமைகூறல்.

காகமிடத்திருந்துகைக்குவலப்புறத்தில்
ஏகக்கருடனிடமாக-யோகபலம் ௧௯௪

ஏடகங்கண்டமைகூறல்.

இன்றுவந்தகாருகமக்கென்றுவந்தேனேடகத்திற்
சென்றுவந்தேயந்தச்சிவனார்-அன்றுதெரி ௧௯௫
நாகமலரும்நறுங்கொன்றைப்பூவிதழுந்
தியாகமெனப்பொன்னுமுத்துஞ்சிந்திசிறப்பத்-தோகைவிரிச் ௧௯௬
சித்தேனென்பூர்வவிசனதோஷங்களெல்லாம்
இத்தேசங்கண்டதொலைவியேன்-அத்தலத்தில் ௧௯௭
வேப்புகரும்பாமாம்வெண்மணலோநீறாமாம்
தாம்புவிடுநீரமிர்தந்தானுமாம்-தேம்பும் ௧௯௮
வறியேன்மருந்தின்மயக்கமுநோயுந்தீர்த்
தறிவாளனுக்கிவிட்டதவ்வூர்-நெறியுடனே ௧௯௯

அற்றைநாள்சங்கியருணோதயத்தெழுந்து
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன்-வெற்றிபுரி ௩௰

கோடிகொண்டமால்யானைக்கூளேந்திரனென்பதுபேர்
நாடுகண்டேனென்கவலைநான்காணேன்-ஆடகவான் ௩௰௧

பின்புநாட்டுவளங்கண்டமைகூறல்.

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகம்வாழைகளும்
கட்டியபூங்காவனமாகக்காண்பிக்க-விட்ட ௩௰௨
வருக்கைபலாக்கனியைமந்தியிருகைக்கொண்டு
நெருக்குவதுமாதளக்கோட்டென்ன-உருக்குமிசை ௩௰௩
வண்டுறிக்கிகூட-வரிக்குயில்கள்பண்பாடக்
கண்டுகிளிகள்கவிபாடத்-தண்டாத ௩௰௪
மன்றலங்காரல்லிமலர்வாடைக்காற்றுலவப்பட்
டொன்றோடொன்றுதாளம்போலொத்திசைப்ப-பின்றுலகில் ௩௰௫
நீலவனத்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக்
கோலவணிதயர்போகக்கூத்தாடச்சோலைக்குள் ௩௰௬
ஆங்குநதிபாயமலரோடையானைவாள்
வாங்கியவீச்சுவளங்காட்டப்-பூங்காவில் ௩௰௭
வந்துநுழைந்துசெல்வாலரவிகூடத்துக்குப்
பந்தம்பிடிக்கும்படிசிறப்பு-முந்த ௩௰௮
முகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்கும்பாவனையாய்நண்ண-மிகுத்தபொரித் ௩௰௯
தாடுகின்றமஞ்சையெதிரன்னம்பறந்துவந்து
போடுகின்றவெண்டுசுபோற்படிய-நீடுலயச் ௪௰
சாலிக்கதிர்குலையிங்காமரையுமநகரும்
சோலைக்குண்மன்னர்குழாஞ்சூழ்ந்ததொக்குஞ்சோலைவளம் ௪௰௧
ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன்
வேதன்றொழுங்கோயின்மேட்டிலே-சீதையுடன் ௪௰௨

இம்மராயரைக்கண்டுதெரிசித்தமைகூறல்.

மாதவனைக்கண்டேனென் வல்வினையெல்லாமுடனே
ஆதவனைக்கண்டபனியாகினேன்-பாதம் ௪௰௩
தொழுதிம்மராயர்துதித்துனைப்பாடாமல்
பழுதிலேவேசையரைப்பண்ணி-முழுவதுமுன் ௪௰௪
மீனவடிவமைந்தமின்னார்காணென்றுநீ
யானசிங்கரூபமிடையாமென்றும் மேன்மையுடன் ௪௰௫
மைக்கிசக்கரூபத்தைமங்கையர்க்கூந்தலென்றும்
கைக்கிசைந்தசங்கைக்கழுத்தென்றும்-திக்கனைத்தும் ௪௰௬

தங்கிப்புலவரெல்லாந் தந்தவனைத் தந்தமல
ருங்கிதிருமுகத்துக்கொப்பென் றும்சந்தக் . ம் ௱௰௭
லோடுத்த மின்னிசையைமின் னார்வசனமென்று
நீபடிக்கும்பாவையைநிதம்பமென் றுர்-வாய்ப்பிதற்றிப்
௱௰௮
பாடினேனிந்தப்பலங் கண்டே . சிங்கைதமலர்
சூடினேன்பாதந்தொழுமெழுந்தேன் ஆடி ௱௰௯

பதியின்சிறப்புக்கண்டமைகூறல்,

அளகாபுரிக்குமமராபதிக்கும்
வளமானவப்புரிக்குவந்தேன் பளபளனும் ௱௨௰
செம்பொனெடுமதிலுந்தேரோடும்வீதிகளும்
கும்பமுநிரைத்தகோபுரமும் - அம்பரத்தில் ௱௨௰௧
ஆற்றுநீரள்ளியருக்கனுடல்குளிரத்
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும்-நீற்றொளிசேர்
௱௨௰௨
தன்னிறத்தைப்பொன்னிலத்துத்தந்திக்கிந்நிலத்துப்
பன்னிறத்தைப்பெற்றபரிசைகளும்-இன்னவழ ௱௨௰௩
கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையன்கோயிலனும்
கர்த்தனையுங்கண்டுகமலத்தாள-பத்தியுடன் ௱௨௰௪

ஆண்மனைகண்டுசென்றமைகூறல்.

சேவித்தேன்கோயிலுக்குத்தென்புறத்திற்கற்பகப்பூ
நீவித்தேனூற்றுநெடுமதிலும்-மேவுமுசும் ௱௨௰௫
இட்டமணிப்பொற்குடங்களெட்டுலகைச்செந்திருவின்
வட்டமுலைபோல்லகுமாளிகையும்-தொட்டுக் ௱௨௰௬
குழைக்கின்றநல்குரவுகொண்டேனைவாவென்
றழைக்கின்றதுபோனின்றாட்டம்-தழைக்கின்ற ௱௨௰௭
சிங்காரவெள்ளைச்செயலாலுஞ்சண்டிதுவே
எங்கோனாண்மனையென்றெய்தினேன்-தங்கப் ௱௨௰௮
படையாற்றிருடர்பயத்தாற்கொடையால்
அடையாதவாசலுக்குளானேன்-தடவிகட ௱௨௰௯
காந்தகழுஞ்சிறுசட்காரனைநிற்பவது
எந்தவெசாலைகண்டுபதிலென்றுமனம்சேர்ந்துநான் ௱௩௰
[illegible] பூண்டிலேயாளென்றென் முலைமேலென்மனதைச்
[illegible] மெள்ளத்திருப்பினேன்-செல்வமுதல் ௱௩௰௧
[illegible] ருமபோவாரும்
[illegible] க்குட்டிக்கினேன்-வீசுகின்ற ௱௩௰௨
[illegible] க்கப்புக்குமபயங்கெனைப்பின்பற்றிவந்த
மொட்டைக்கல்யன்முடுக்குணட்டான்-இட்டப்போய் ௱௩௰௩
ரங்கப்பன்கொலுசுல்கினுன்மோதிரமென்

அத்தினைக்கொல்லவிரனை யாரென்றுரைப்பாரான்
வித்துவானென்றுசொன்னேன் விட்டுவிட்டார்மொய்த்தமணிப் ௲௯௩

கொலுச்சிறப்புக்கண்டமைகூறல்.

பத்திவிலாசப்பவளக்காற்பொதிகைப்பூ
வைஞ்சகனகமணிமண்டபத்தில இந்திகிரி ௲௯௫
வாளலோகம்புறக்குமல்பெரியநாகேந்த்ர
கூளஞ்சுபாலன்கொலுவாகக்-கோளிற் ௲௯௬
செயமாதுகூத்தாடத் திங்கண்முகமேபங்
கயமாதுதன்கருணைகாட்டக்-கையிலேந்து ௲௯௭
செப்பழித்தவளாசெவிக்குகோராகின்றெனக்கூன்
ஏயமட்டகத்தையாசொல்லெனக்கேட்பச்-செவ்வியபூஞ் ௲௯௮
சந்த்ரகாவித்தலைப் பாகைமேற்கவினை
சந்த்ரோதயகாந்திதான்கேட்ட-அந்தரமும் ௲௯௯
திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள் கீர்த்தியைப்போல்
மிக்கிரட்டைப்பாவாமை வீசிநிற்கச்-சொக்கர் ௲௱
அவிர்வொளிரத்னங்கிபத்திருபால்வீசும
கவரியுபயநிறக் காட்டக்-கவலைபடும் ௲௱௧
சொற்காட்டுமொன்னுர் தொழுதுவந்துகொஞ்சப்
பற்காட்டுஞ்சென்னி பதிகதமணி-முற்காட்டு ௲௱௨
சாமித்துரோகரைப்போற் றண்டைமுகப்பில்வெற்றிச்
சோமதகலைபோலச் சோதிவிட-வீமராண ௲௱௩
தீரதுரைமக்கள் செயமந்திரிமாரு
வீரதளகர்த்தர்களும் வேந்தர்களும்-பார்மதிக்கும் ௲௱௪
ஸ்தானபதிகளும்பாசண்டயோகிகளும்
ஞானகளுநிரிந்த நாவலரும்-கோன்முறைமைக் ௲௱௫
கேற்கவகைக்கிதவகை யின்பந்தருவதென்ன
வந்துபராசர் மனுகேட்பச்-செந்திருவாழ் ௲௱௬
துய்யவதனசந்த்ரசோபைநறுந்தெள்ளமுதை
தையநல்லார்செங்கட்சகோராமுண்ணக்-கைகுவித்து ௲௱௭
வாரிட்டராணுவரிசையாய்நிற்கவெதிர்
காரிட்டயானைநின்று காதாட்டத் தாரிட்டும ௲௱௮
பொன்னின்முகப்பூண்டு பூட்டிநிறைத்தடில்லி
வன்னப்பரிகனைத்துவாவிநிற்க-எந்நேரம் ௲௱௯
கூடிஞ்சனுவூழியக்காரர் கோடிசெய்த
தேடுங்கனசேருவைக்காரர்-சோடிட்டுத் ௲௱௰
சத்தராமாய்க்காவிட்ட தண்டைகளும்சேடயமும்
கத்தியுமாய்வந்துநின்று கைகுவித்துச்-சித்தமவரச் ௲௱௰௧
சிங்களத்தைவிட்டுச் சிறைபிடிக்கவோநாங்கள்
வங்களத்திலேகலகம் வைக்கவோ-பங்கமில்லா ௲௱௰௨

கல்லத்துக்கோட்டையைப்போய் வாங்கவோவாங்காதோ
கொல்லத்தைகொள்ளையிட்டுக் கொள்ளவோ-மெல்லப்போ ௩௫௩
சொல்லையாவென்னத் தொடிமடியங்காரர்பணம்
செல்லும்வரவுஞ்செவிக்கேற-நெல்லுவிதி ௩௫௪
ஆயக்கமுஞ்செலவு மாதாயமுங்கழிவும்
வாயிற்கணக்கர்வந்து வாசிக்கத்-தேயத்துக் ௩௫௫
கோபிவாலைவாசகத்தை கூறுவாருமெழுதி
ஏவோலைகொப்பமிடச்சொல்லத்-தாவித் ௩௫௬
தகருந்தகருந் தலையுந்தலையுங்
தகருந்தகருமெனத் தாக்க-விகடகட ௩௫௭
மல்லரையமுற்பகையு மல்லராய்க்கட்டிவிழு
மல்லராய்கைகுவித்து வாக்கிறைப-வெல்லக் ௩௫௮
குறும்புள்ளாயக்கைக் குறும்புள்ளாக்கோபம்
குறும்புள்ளாய்ப்பாய்ந்து குதிகொள்ளப்-பறங்கிகளும் ௩௫௯
சோனகருந்தந்த துரிதவராகனிது
சீனர்வரவிட்ட சிவிகையிது-யானைகட்டி ௩௬௰
மிண்டுகொண்டமைசூர்மேல் வேட்டைபோம்நம்முடைய
தண்டுகொண்டுவந்த தனங்களிது-மண்டலிகர் ௩௬௧
இட்டதிரைகளிதுபாரக்கென்றுசொல்லிக்
கட்டியர்கொண்டாடக் கனபேரி-கொட்டரண ௩௬௨
மல்லாரிகொட்டவகோபிலமால்கோயிலா
ரெல்லாருமோர்யா லினிதிருப்ப-நல்லமிர்த ௩௬௩
போசனங்கூளபூபாலன்சத்திரத்து
மாசனமுமன்றுடி மங்கலத்து-மாசனமும் ௩௬௪
அத்தலக்குண்டுமாசனமுமாற்றூராம்
அத்தலத்தில்வைதிகரு லக்கணரும்-வித்வசனர் ௩௬௫
பட்சமுமழுமெங்கோன் பவிசுப்பலன்களுமென்
றகூதபமாமென்றகூதைவழங்க-ரட்சகனும் ௩௬௬
கோரசிங்கருபவுக்ர கோதண்டபாணியைப்போல்
வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தான்-சூரியன்முன் ௩௬௭
பங்கயம்போலானேன்பாயரெனச்சென்றெதிரே
செங்கைதனையேந்திச் செயமென்றேன்-இங்கே ௩௬௮
இருமென்றென்னையனிடங் காட்டப்பெற்றேன்
அருகிலிருந்தேன் மகிழ்ச்சியானேன்-கருணைபுரிந் ௩௬௯
தென்மேலவிழிவைத்தா னெங்கோன்குறிப்பறிந்து
பொன்மேவும்யெஞ்சை புரந்தரா-மன்று ௩௭௰

கேளக்காவல்லாநிலைக்கோட்டைராயா
அதளங்காவாளுக்கபிமா-நகைமுகப்பிக் ௧௭௧
தாபாகவிகோபாசதூரவிருதுபண்டு
பாபாவலக்கவசம்பாக்யகுல-தீபா ௧௭௨
சுமுகப்ரமுகவல்லிதசுகுககுணாளயனைய
சமுகநகைமுககமலதளநயன-அமிர்தரச ௧௭௩
மதுரவித்வவசனமிாதமதமெழுதுபுயசைல
சதுரதடகடகரடசமரகரி-உ.சயசெரு ௧௭௪
விதகடனபரிகுலவிகடமிடுமகுடமுடி
அதிரவடிவருசோணடலபய-அதுலகுல ௧௭௫
சந்திரசிந்தூரசந்தனகுங்கும
மந்திரகொங்கைமடைந்தையர்-சுந்தர ௧௭௬
கல்விப்பெருங்கடலே கற்பகன்றேகமலச்
செல்விக்குவாய்த்ததிரவியமே-வெல்லுமதக் ௧௭௭
கூனகோட்டியானைக்குருகாரெனுங்காட்டு
மான்கோட்டஞ்சாடும் வரிப்புலியேமீன் கூட்டம் ௧௭௮
பாதிக்குறவரிந்தபன்றிமலைச்சாரலிலே
ஆதிக்கஞ்செய்திருக்கு மாளியே-ஓதுபகை ௧௭௯
வீரமண்டலீகரெனும்வேழங்களைவிழுங்கும்
பாரகண்டபேரகண்டபட்சியே-சோலாய் ௧௮௰
அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராங்
கண்டிற்கிழக்குஞ்சாபமே-திண்டிறல்வேற் ௧௮௧
போசேந்த்ரசக்ர புவனேந்த்ரராஜாதி
ராசேந்த்ரதினசனரட்சிகா-வீசுதுரை ௧௮௨
ஆற்றிலேநாலுமனுதினமும் பொன்னூறும்
ஊற்றிலேயாருமுடையானே-ஏற்றமுள்ள ௧௮௩
பத்தூரல்வென்றுப்படைக்குந்தலையூராம்
நத்தூருமொன்பதூர்நாயகனே மொய்த்தகடல் ௧௮௪
ஒப்பத்திரண்டுதளமுள்ளசதுரங்கியங்கள்
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் ௧௮௫
அண்டலரைவெல்லுமறுபத்துநாலுமன்னர்
கண்டசெய்துரங்காணகங்கண-னேண்மீடுகொண்டு ௧௮௬
சண்டைக்குடில்வித்தளம்வந்துதானலும்
கண்டுமலையேறாதகண்டனே-தண்டஜய ௧௮௭
தண்டனேகாரியவுத்தண்டனேகூதாலே
தண்டனேவீரியகோதண்டனே-தண்டவலத் ௧௮௮
தாரனேசற்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத ௧௮௯

சோமனையன்னசந்த்ரசோமனைகற்பகப்பூங்
காமனைவிறகரும்புக்காமனை-நாமகள்சேர் ௱௬௰
பெஞ்சைநகர்சிந்தமனைபேறேசாற்கல
மஞ்சைமிகழுந்தியாகவள்ளலே-அஞ்சிக் ௱௬௧
தொழுதக்கவேந்தருக்குத்தள்ளுசீட்டொப்பம்
எழுதும்பெரியநாகேந்த்ரா-எளியோர் ௱௬௨
கரங்கள்விரித்தேறக்கண்டதுவாபோல்
இரங்கும்பெரியநாகேந்த்ரா-வரந்தள் ௱௬௩
செருக்குமதருபம்போற்சிங்காதனத்தில்
இருக்கும்பெரியநாகேந்த்ரா-பருக்கும் ௱௬௪
மழைக்கும்பகழும்மதயானைவீரிட்
டழைக்கும்பெரியநாகையா-தழைத்தபுகழ்க் ௱௬௫
கூளமஙீபன்குமாரதுரைச்சிந்தமனும்
வாளபயசோதரவீரனே-நீன்சலை ௱௬௬

கல்வித்தை அரங்கேற்றினமை கூறல்.

சம்பனுவென்றுதமிழ்பாடினேன்தமிழிற்
கம்பனுமென்றூர்கவிராசர்-சொம்புபெறக் ௱௬௭
காட்டாகநூறுகவிசொன்னேனங்கேயென்
அஷ்டாவதானமரங்கேற்றினேன்-அஷ்டாங்க ௱௬௮
யோகக்காவித்திலோருள்ளமகிழ்ந்தமிர்த
பாதமெனச்சொல்லப்பண்ணினேன்-தியாகநிதி ௱௬௯
என்னும்பெரியநாகேந்த்ரன்களங்க
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் ௱௭௰
கவிச்சக்ரவர்த்தியென்றான்காவலாநீயே
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குநல்ல ௱௭௧

வெகுமதி செய்தமை கூறல்.

முத்துக்கடுக்கனொடு முன்கைதனக்கிணங்கும்
அஸ்தகடகம்ரத்னஆரமணிக்-கொத்துச் ௱௭௨
சரப்பணிதும்பிப்பதக்கஞ் சாலுவைபொற்காந்தி
பரப்பியிடுபொற்சரிகைப்பாகை-தரித்தருள்பீ ௱௭௩
தாம்பரங்களீந்தான்தருப்போலவனைக்கண்
சாம்பரிசிலீயமற்றுமுன்னே-மேம்படும்போ ௱௭௪
ட்டுபுகழ்க்கல்லூர்வாழ்திப்பணவேளென்தலைக்குச்
சூட்டவொருமுத்துத் துராவீந்தான்-தாஷ்டிகோத் ௱௭௫
தண்டெனுமகூளேந்த்ரன் தம்பியாஞ்சிந்தமனோர்
கண்டசரமீந்தான் கழுத்துக்குக்-கொண்டலெனும் ௱௭௬
முத்துராயன்கொடுத்தான் முன்னணிசுமாக்கியணன்
பத்துவராகன்பெறமேவோர் பாகீந்தான்-சித்தசனும் ௱௭௭

செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவேள்-தக்கவனே ௲௱௮
ராசகோபாலையனல்கினன்சீர்கொண்முத்துப்
போசனொருமுகத்துவடம்பூட்டினான்-பேசுபுகழ்ச்சி ௲௱௯
சக்கபூபன்கொடுத்தான்சாலுவைகன்னாத்தங்க
சந்தான்கொடிநாகமொன்னைக்கையில்வாய்ந்தபுகழ் ௲௱௰
நல்லவனுக்கச்சுநடைப்பரியீந்தானுலகம
சொல்லும்பணிக்காயல்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூக் ௲௱௰௧
கைவலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி
துய்யவெள்ளிக்குண்டுசொக்காய்தந்தான்-பொய்யுரையாக் ௲௱௰௨
கூளக்கணக்கன்மணிக்குண்டலந்தந்தானிரண்டு
கோளிற்றானுக்களவாய்த்தூக்கவே-வேலைக் ௲௱௰௩
குதவியதம்பான்கொடுத்தானென்பதுபொன்பட்டுச்
சதுரன்கைலாசதயாளுபுதுவயிரத் ௲௱௰௪
தண்டோட்டிதந்தான்சவாதுப்பணிதந்தான்
கொண்டசொக்கலிங்கன்கொடுத்தானே-முண்டாசு ௲௱௰௫
சட்டமிட்டுசொக்கலிங்கன்தந்தான்கணையாழி
கட்டழகன்பாசிபந்துகட்டினான்-பட்டை ௲௱௰௬
யரைஞாண்தந்தார்பொன்னரைசட்டைதந்தான்
வரிசையாய்ராமமகிபன்-முறுகுமுத்து ௲௱௰௭
சின்னனுதவினான்றீரன்வடக்கவன்
பொன்னால்விருதுதண்டைபூட்டினான்மின்னெறிக்குந் ௲௱௰௮
தாயிரத்திராமனைதந்தான்திருமலையான்
நேயத்தாற்பொற்பூவிசாமுதந்தான்-தூயதுணைக் ௲௱௰௯
காமனீந்தானற்கறலையைந்துகண்டையிட்ட
சோமனீந்தானரைக்குச்சோபகச்சோமனையும் ௲௱௨௰
பசலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடன்
பாலுக்குக்காராம்பசுதந்தான்-மால்குழைத்து ௲௱௨௰௧
வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாய்மேகம்
போலக்கொடுத்தோட்டிப்போவென்றால்-சில்பு ௲௱௨௰௨
பாலன்கொடுத்தானோர்பச்சைவடஞ்சோடங்கி
நாலுமடிப்புசொக்கநல்கினன்-சீலனெனும் ௲௱௨௰௩
நல்லமதன்கொடுத்தாநல்லகுதிரைமறி
கல்விதெரிசிக்கனென்கண்குளிரக்-கொல்லத்துப் ௲௱௨௰௪
பச்சைக்கபாய்தந்தான்பாரியொத்தசாமியங்கே
மெச்சுளனக்கிரண்டுமேதிதந்தானுச்சிதமாக் ௲௱௨௰௫
கூதலுக்குப்போர்வைதந்தான்கொண்டபூபன்றுலக
நாதன்சகலாத்துநல்கினன்-மாதங்கக் ௲௱௨௰௬
கட்டிக்கொடுத்தனனுக்கண்டவன்குருவா
ரெட்டிகொடுத்தானதற்குரெட்டிப்பு-கட்டிவிட்டு ௲௱௨௰௭
காழிமுத்தைமுகத்தையவேணல்கவரதப்பனொரு
தாழிவிரலைப்போட்டான்சமூகத்தில்-வழிபொளை ௲௱௨௰௮
மங்கையனீந்தானங்கோதகண்டிராமயனே
துங்கன்கொடுத்தான்பொன்தொண்ணூறு-திங்கண்முக ௲௱௨௰௯

வீரப்பெருமாள்விரலுக்குவச்சிரக்கல்
சேருற்றபொன்மோதிரந்தந்தான்-கோர ௲௧௩௰
அனுமத்துவசாருங்கருட்டாலர்
கனவிருதுசிங்கடாற்காரரெனவாழ ௲௧௩௧
எல்லாருஞ்செம்போனிறைந்தாரையானனைஞ்சூழ்
நல்லாசனம்பெரியநாகேந்த்ரன்செல்வத் ௲௧௩௨
துரையெனக்கங்காட்டான்சொர்ணாபிஷேகம்
கரையெனத்தந்தானுமைதமாளரக் ௲௧௩௩
சவிகைதந்தான்வெள்ளைக்கரிதந்தான்செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்தரவிபோல் ௲௧௩௪
இருட்டகற்றுதீவட்டிமீந்தான்மதிபோற்
சுருட்டிதந்தான்றுவசம்பெருத்தசில ௲௧௩௫
ஊர்தந்தானும்பளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
ஏர்தந்தான்வாவுக்கிடந்தந்தான்ஆர்தந்தார் ௲௧௩௬
இந்தத்தியாகமிவனைப்போல்வாவியா
விந்தத்தியாகவந்தமெல்லியலே-இந்தவிதம் ௲௧௩௭

விறலியைத்தூதுவிடுத்தமைகூறியது.

என்செய்தியாதிதொடர்ந்ததெல்லாமுனக்குரைத்தேன்
பெண்செய்தவமுமமூர்க்குபோயினிநீமின்செய்த ௲௧௩௮
சிற்றிடையாகியவென்றேவியாரைக்கண்டு
நற்றிறஞ்சேர்வீணையம்பாடி-மற்றவளுக் ௲௧௩௯
கென்குறைதயமெள்ளவியம்பியெதிர்சொலலுமந்தப்
பொன்குறையுங்கேட்டுடல்போக்கியோநன்குறுமென் ௲௧௪௰
ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு
வேசைமனக்கேகுவரோவிட்டெனவாலேசனையும் ௲௧௪௧
கொள்ளாமலென்பதங்கூறிமுன்னைக்குற்றநினைந்
தெள்ளாமற்கற்பினியல்போதி-உள்ளாளப் ௲௧௪௨
பண்பாடியுட்கமரபாணம்படச்செய்து
கண்பாடியென்னவரவைநான்கேட்டுக்-கண்பார்க்க ௲௧௪௩
ஓசையாமுன்போலுறவாக்கச்செல்லவழி
தோகைவிரலிநீதூது. ௲௧௪௪

ஆக கண்ணிகள் ௲௧௪௪.

விறலிவிடுதூது-முற்றிற்று.

[illegible]

[illegible]

2864

50

Cml J
15 12 69